[1973 ஆகஸ்ட் 7

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

Building for Hindu Religious Endowments Office at Kancheepuram

* 71 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a building for the Office of the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments Department at Kancheepuram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இந்து சமய அற நிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர், துணை ஆணையர் ஆகியவர்களுக்குக் குடியிருப்புகள் மற்றும் அலுவலகம் புதிதாகக் கட்டுவதற்கான பணித் திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. விஷ்ணு காஞ்சி சர்வே எண். 262-ல் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்குப் பின்புறம் இடம் தெரிந்தெடுக்கப்பட்டு அதற்காக ஒரு மதிப்பீடும் ரூ. 1,53,000-க்கு ஒப்பளிக்கப் பட்டுள்ளது ; கட்டிட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப் பட்டு பரிசீலனையில் இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு இடத்திலேயும் அசிஸ்டெண்டு கமிஷனருக்காகத் தனியாகக் கட்டிடத்தைக் கட்டி, பணத்தை முடக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா ? அரசாங்க இலாகாக்கள் இருக்கின்ற கட்டிடத்தை இந்த இலாகா தனக்குப் பயன்படுத்துவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அரசு தெரிவிக்குமா ? இப்படி அதிகாரி களுக்கு வீடு கட்டுவதுடன் கோயில் சிப்பந்திகளுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதாவது அரசு தயாரித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பண வசதி உள்ள கோயில்களில் சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு வசதி செய்யப்பட்டுள்ளது, செய்துகொண்டு வருகிறோம். ஆனால், வாடகைக் கட்டிடங்களில் உள்ள அலுவலகங்கள் அல்லது குடியிருப்புகளுக்கு அதிகப்படியான வாடகையை நாளுக்கு நாள்

கொடுக்க வேண்டியிருப்பதால்தான், நம்முடைய துறையிலே போதுமான பண வசதி இருக்கின்ற காரணத்தால் அங்கங்கு கட்டிடங்கள் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Jagannatha Nagar Sundara Vinayagar Koil

* 72 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the "Kreedam" of Sundara Vinayagar Koil at Jagannatha Nagar, Arumbakkam was reported to the police to be lost about December 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ரூ. 30 மதிப்புடைய வெள்ளி முலாம் பூசப்பட்ட கிரீடம் களவாடப்பட்டது. இதுபற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

Kumbakonam Sarangapani temple car

* 73 Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether steps have been taken to run the temple car of Sri Sarangapani Devasthanam at Kumbakonam during 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இத்திருக்கோயிலின் தேரினை அரசு தொழில் நுட்ப அலுவலர்கள் பார்வையிட்டு அதனைத் தற்போதைய சூழ்நிலைகளுக்கேற்பப் புதுப்பித்து, மீண்டும் ஓட விடுவதற்குரிய சாத்தியக் கூறுகளையும், வழிமுறைகளையும் ஆராய்ந்து வருகின்றனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப்பட்ட பழம்பெரும் தேர்களை எல்லாம் ஏதோ ஏலம் விடப்போகிறுர்கள் என்ற செய்தியைப் பார்த்தோம். இப்படி ஏலம் விட்டால் பழைய கலைப் பொருள்களை நாம் இழந்து விடுவோம். ஆகவே, அப்படிப்